[திரு. பி.ஜி. நாராயணன்] [2011 ஜுன் 8

ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் செலவில் 300 சதுரஅடியில் அரசே வீடு கட்டிக்கொடுக்கும். இப்படி நடைமுறையில் சாத்தியமான திட்டங்களைத்தான் அம்மா அவர்கள் அறிவிப்பார்கள்.

தரமான பள்ளிக் கல்வியை இலவசமாக அனைவருக்கும் வழங்குவது அரசின் கொள்கையும், நோக்கமும் ஆகும். முன்பு ஆட்சியில் இருந்தபோது அம்மா அவர்கள் மாணவர்களுக்கு இலவசமாக சைக்கிள்களை வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாணவர்களுக்கு இலவச மடிக் கணினி-லேப்-டாப்-வழங்கும் திட்டத்தை 2011 செப்டம்பர் 15-ம் நாள் முதல் இந்த அரசு தொடங்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். முதல் கட்டமாக 9 இலட்சத்து 12 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன் பெறுவார்கள். படிப்படியாக இந்தத் திட்டம் அனைத்து மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது என்ற அறிவிப்பு படிக்கும் மாணவர்களின் மத்தியில் மிகுந்த மகிழ்ச்சியையும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

முந்தைய அரசால் தொடங்கப்பட்ட கேபிள் டி.வி. நிறுவனம் செயலிழந்துள்ளது. இதை உயிர்ப்பித்து செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு கேபிள் சேவையை வழங்க அரசு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க முடிவாகும். ஆளுநர் உரையில் வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் அளிக்கும் வகையிலே பாசன ஆதாரத்தை. . .

(அவையில் செல்லிடத் தொலைபேசி ஒலி ஒலித்தது.)

8. அறிவிப்பு

செல்லிடத் தொலைபேசியை அவையில் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே நம்முடைய மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவாக அறிவுரை வழங்கப்பட்டுவிட்டது. செல்லிடத் தொலைபேசியை switch off செய்துவிட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இரண்டு முறை செல்லிடத்

2011 ஜூன் 8] [பேரவைத் தலைவர்]

தொலைபேசி ஒலி ஒலித்திருக்கின்றது. தயவுசெய்து ஏற்கெனவே சொன்ன அந்த அறிவுரையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

திரு. பி.ஜி. நாராயணன்: ஆளுநர் உரையில் வேளாண் துறைக்குப் புத்துயிர் அளிக்கும் வகையிலே பாசன ஆதாரத்தைப் பெருக்கும் முயற்சியாக மாநில நதிகளை இணைக்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும் என்ற அறிவிப்பு விவசாயிகள் மத்தியிலே மிகுந்த வரவேற்பையும், பாராட்டையும் பெற்றிருக்கிறது.

பவானி தொகுதியில் பவானிக்கு அருகில் அரசு விவசாய விதைப் பண்ணை பரந்த பரப்பிலே உள்ளது. இதில் விவசாயக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு Bio Fertilizer Unit என்ற ஒன்று நிறுவப்பட்டு கடந்த 2 வருடங்களாகச் செயல்படாமல் இருந்து வருகிறது. மாண்புமிகு விவசாய அமைச்சர்கூட போன வாரம் இந்த நிறுவனத்தைப் பார்வையிட்டுள்ளார். இந்த நிறுவனம் செயல்பாட்டிற்கு வந்தால் வருடத்திற்கு 200 மெட்ரிக் டன் நுண்ணுயிர் உரம் Bio Fertilizer என்ற இயற்கை உரம் தயாரிக்க முடியும். விவசாயிகளின் நலன் கருதி இந்த நிறுவனத்தை உடனடியாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஜமக்காள உற்பத்திக்கு பவானி பெயர்பெற்றது. நூல் விலை உயர்வால் கைத்தறித் துறை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல, ஜமக்காள உற்பத்தியும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. புதிய நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தினால் ஜமக்காள உற்பத்தித் தொழில் புத்துயிர் பெறமுடியும். ஆகவே, Carpet Technology அதாவது ஜமக்காள தொழில்நுட்பக் கல்லூரியை பவானியில் ஏற்படுத்த வேண்டும் என்று அம்மா அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.